# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.95/2022

**Deposition of Witness for : P.W.2**

**Name :** திருமதி பச்சையம்மாள்,

**Father's Name :** சரவணன்

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.11.2023.**

முதல் விசாரணை -

நான் சித்தேரி கிராமத்தில் வசிக்கிறேன். கட்டிட கூலி வேலை செய்கிறேன். புருஷோத்தமன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரியும் தெரியும். இருவரும் அண்ணன் தம்பி. அ.சா.1 குமரேசன் என் வீட்டுக்கு எதிர்வீடு. என் வீடும் புருஷோத்தமன் வீடும் பக்கத்து பக்கத்து வீடு. புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை.

இந்த வழக்கை பற்றி எனக்கு என்ன தெரியும் என்றால், 10, 10.30 மணிக்கு புருஷோத்தமன் அவர் வீட்டுக்கு பக்கத்தில் உள்ள அவர் அக்கா வீட்டு காலி மனையில் விழுந்து கிடந்தார். எதிரில் இருந்த வீட்டில் உள்ளவர்களிடம் விழுந்து கிடந்ததை சொல்லி அழைத்தேன். அதன்பிறகு புருஷோத்தமனின் அக்கா, மாமா வந்து அவரை ஆம்புலன்சில் அனுப்பி வைத்தார்கள்.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

இரண்டு வருடத்திற்கு முன்பு 10வது மாதம் நான் வீட்டில் தூங்கிக்கொண்டு இருந்தேன். அப்போது காலி மனையில் சத்தம் கேட்டது. காலி மனையின் பக்கத்தில் தான் என் வீடு. என் வீட்டில் இருந்து பார்த்தால் பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறது என்பது தெரியும் என்றால் சரி தான். எதிரிக்கும் இறந்துபோன புருஷோத்தமனுக்கும் ரமேசிற்கும் சொத்து தகராறு இருந்தது என்றால் சரி தான்.

ஆஜர் எதிரி சென்னையில் வேன் ஓட்டி வருகிறார். ரமேசும், புருஷோத்தமனும் ஊரில் உள்ளார்கள் என்றால் சரி தான். அன்றைய தினம் புருஷோத்தமன் ஆஜர் எதிரி ராஜசேகரன் மற்றும் ரமேஷ் ஆகிய மூவரும் இருந்தார்கள் என்றால் புருஷோத்தமன் மட்டும் தான் இருந்தார். ரமேஷ் வண்டி ஓட்ட சென்றுவிட்டார். அவர் இல்லை. ஆஜர் எதிரி சென்னையில் இருந்தார்.

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும், போலிசார்

விசாரித்தபோது, வாக்குமூலத்தில் உள்ளவாறு புருஷோத்தமன் எரிந்து இறந்ததையும் அதற்கு எதிரி தான் காரணம் என்று குறிப்பிட்டு வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரியும் எங்கள் தெருவை சேர்ந்தவர் என்பதால் எதிரியை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புருஷோத்தமன் விழுந்து கிடந்ததை தான் பார்த்தேன். மற்றபடி நான் கிட்டவே போகவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போய் பார்க்கும்போது 9.30, 10 மணி இருக்குமா என்றால் 10 மணி இருக்கும். புருஷோத்தமன் விழுந்து இருந்ததாக சொல்லப்படும் காலி மனையில் நெல் அவிப்பதற்காகவும், மாட்டு தீவனத்திற்காகவும் அடுப்பு எரிந்துக்கொண்டு இருந்தது என்றால் சரி தான். நான் போய் பார்த்தபோது புருஷோத்தமன் பேச்சுமூச்சு இல்லாமல் விழுந்து கிடந்தார் என்றால் நான் போய் பார்க்கவேயில்லை. விழுந்து கிடந்தது சம்பந்தமாக தகவல் சொன்னதோடு சரி. எதிர்வீட்டார் தான் போய் பார்த்தார்கள்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.